இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 29.04.2025

O.S. 133/2019

வா.சா.4 -குத்தாலிங்கம்

முதல் விசாரணை.

நான் இந்த நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது தென்தாமரைகுளம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். Fir .No. 155/2018 யார் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் ராஜதுரை , த/பெ. தங்கநாடார். யார் மீது புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் கார்த்தியப்பன், பாலன், அருளானந்த், ராஜ்குமாருக்கு எதிராக புகார்கொடுத்தார். வழக்கு 447,427,434 இ.த-ச.பிரிவுகளின் கீழ் பதிவு செய்தேன். வழக்கில் சொல்லப்பட்டுள்ள எதிரிகள் பொற்றையடி இசக்கியம்மன் கோயிலுக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து எல்லை கல்லை புடுங்கியதற்காகவும் , கோவிலின் பூட்டை உடைத்ததற்காகவும் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கானது குற்றபத்திரிக்கை தாக்கல் செய்து குற்றவியல் நடுவர் எண். 3 ல் S.T.C 2/2020 ஆக நிலுவையில் உள்ளது. அதில் எதிரி அருளானந்தின் மீதான குற்றம் விடுவிக்கப்பட்டு மற்ற 3 பேர் மீது வழக்கு நிலுவையில் உள்ளது.அந்த முதல் தகவல் அறிக்கை வா.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களது காவல்நிலையத்தில் கு.எண். 44/2019 என்ற வழக்கு ராஜதுரை த/பெ. தங்கநாடார் புகார்கொடுத்து தாக்கல் செய்யப்பட்டது. கு.எண். 44/2019 ல் எதிரிகாளக பாலன், முனியசாமி , மகேஷ்வரி , ஆதித்தன், பெரியசாமி, ஆனந்தம்மை , இந்திரா ஆகியோர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது. கு.எண். 44/2019 க்கு குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு குற்றவில் நடுவர் நீதிமன்றம் எண். 3 ல் C.C.495/2020 ஆக பிரிவுகள் இ.த.ச. 147,148,294(பி), 295,297,380,427,447,506(2) ல் எதிரிகள் கழகம் செய்யும் நோக்கத்துடன் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்து பொற்றையடி இசக்கியம்மன் கோயிலுக்குள் வந்து மனுதாரரை அசிங்கமாக பேசி 3 பெரிய வெண்கல குத்துவிளக்கு, 2 செம்புகள், திருடிசென்றதாகவும், கோயிலுடைய கிரில் கேட் , பூட்டு , கதவுகளை உடைத்ததாகவும் ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல்விடுத்ததாகவும் வழக்கு நிலுவையிலுள்ளது .இந்த வழக்கானது காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட

புகார்மனுவின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை. உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் Crl.M.P.No.82/2019 பெயரில் பதிவு செய்யப்பட்டது. கு.எண். 44/2019 முதல் தகவல் அறிக்கை வா.சா.ஆ 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கு.எண்.100/2022 தங்கபத்மா என்பவர் ஆத்தியப்பன், பாலன், இந்தரா கனவன் பெயர், ஆத்தியப்பன், இந்திரா,க/பெ. பாலன் , பெரியசாமி, கண்ணன், கணபதி, க்கு எதிராக கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கு.எண்.100/2022 ல் எதிரிகள் இசக்கியம்மன் கோயிலினுள் அத்துமீறி நுழைந்து அசிங்கமாக பேசி கையால் அடித்து புகார்தாரரின் தலைமுடியை இழுத்து ஆயுதங்களை காட்டி மிரட்டியதற்காகவும் புகார்தாரரின் இரண்டு சக்கர வாகனத்தை நாசம்செய்ததற்காகவும் இ.த.சா. 147,447,294(பி) ,323,427,506(2),மற்றும் Women Harresment Act பிரிவு 4 ன்கீழ்கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு C.C. 237/2022 ஆக நிலுவையில் உள்ளது. இதில் கண்ணன் என்பவர் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யும் முன்பு இறந்துவிட்டார் மீதமுள்ள நபர்களுக்கு எதிரகா வழக்கு நிலுவையிலுள்ளது. கு.எண்.100/2022 ற்கான முதல் தகவல்அறிக்கை வா.சா.ஆ 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.